திருப்பத்தூர் மிக, மிக பின்தங்கிய பகுதி. வேலூர் மாவட்டத்தைப் பிரித்து எங்கள் பகுதியைப் புதிய மாவட்டம் ஆக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது அவசர முக்கியத்துவம் வாய்ந்தது இல்லை.

(ஒ) ஊத்தங்கரை வட்டம், காட்டு யானையால் தாக்கப்பட்டவருக்கு நிதியுதவி மற்றும் பயிர்ச் சேத இழப்பீடு வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 18 ஆம் தேதி, எனது ஊத்தங்கரை தாலுகா அருகே யானை மிதித்து ஒரு வனக் காப்பாளர் இறந்து விட்டார். உடனடியாக அந்தச் செய்தியைக் கேள்விப்பட்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களை அனுப்பி வைத்து, ஈமச்சடங்கு உள்ளிட்ட பல்வேறு விஷயங்களுக்கு உடனே உதவி புரிந்ததற்கு மாவட்டத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏறக்குறைய ஒரு வாரகாலமாக, இன்றுவரையிலும், 300, 400 ஏக்கரில் பயிர் சேதமாகி இருக்கின்றது. யானையினுடைய துதிக்கையால் தாக்கப்பட்டு, உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிற ஒருவருக்கு இன்னும் எந்தவிதமான உதவியும் அளிக்கப்படவில்லை. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களும், பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய பயிர்களுக்கு உரிய நஷ்ட ஈடுவழங்குவதற்கும், அதேபோல், உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கக்கூடிய பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்திற்கு உதவி செய்வதற்கும் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

(ஓ) முகையூர் தொகுதி, மனம்பூண்டியில் மாற்றுப் பாலம் கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.